பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 06 2026 SATURDAY 6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1. நீண்டகால வளர்ச்சிக்கான திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. சமையல் எண்ணெய் பாக்கெட்டுகளுக்கான குறிப்பிட்ட எடை அளவுகளை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

3. காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டுவதை தமிழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது என்று மாநில அமைச்சர் திரு செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

4. பள்ளிகளில் வழங்கப்படும் மதிய உணவின் தரத்தை மாநில அரசு கண்காணிக்க வேண்டும் என்று தமிழக பிஜேபி தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

5. 18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய ஹாக்கி கோப்பையை இந்தியா வென்றுள்ளது.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>

நீண்டகால வளர்ச்சிக்கான திட்டங்களை முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் இன்று தமது தலைமையில் நடைபெற்ற பொருளாதார ஆலோசனைக்குழு கூட்டத்திற்குப்பின் பிரதமர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உத்வேகம் அளிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் குறித்து இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

உலக அளவில் ஏற்பட்டுள்ள அரசியல் பொருளாதார நெருக்கடிகளால் ஏற்படும் பாதிப்பிலிருந்து மீள்வதற்கும், பொருளாதார வளர்ச்சியை பராமரிப்பதற்கும் தேவையான பல்வேறு விஷயங்கள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மக்களின் அன்றாட நடவடிக்கைகளை எளிமையாக மேற்கொள்வதற்கான பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை கொண்டுவருவது குறித்தும் ஆய்வு செய்யப்பட்டதாக பிரதமர் கூறியுள்ளார்.

மேற்காசியாவில் நிலவும் போர் சூழலால் ஏற்பட்டுள்ள தாக்கத்தையும், அதிலிருந்து மீண்டெழுவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இந்த பொருளாதார ஆலோசனைக்குழு கூட்டத்தில் விரிவாக ஆய்வு செய்யப்பட்டதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

சமையல் எண்ணெய் பாக்கெட்டுகளுக்கான குறிப்பிட்ட எடை அளவுகளை மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நுகர்வோர் நலத்துறை, தனது நிலையான செயல்பாட்டு நடைமுறைகளில் திருத்தம் மேற்கொண்டுள்ளது.

**200** கிராம், **500** கிராம், ஒரு கிலோ முதல் ஐந்து கிலோ வரை, **15** கிலோ மற்றும் **20** கிலோ எடை அளவுள்ள பாக்கெட்டுகளாக மட்டுமே சமையல் எண்ணெயை விற்பனை செய்ய வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாமாயில், பாமோலின், சோயாபீன் எண்ணெய், சூரியகாந்தி எண்ணெய், கடுகு எண்ணெய், கடலை எண்ணெய், எள்ளு எண்ணெய், அரிசி தவிடு எண்ணெய், பருத்தி எண்ணெய், மக்காச்சோள எண்ணெய் ஆகிய எண்ணெய் வகைகளுக்கு இந்த உத்தரவு பொருந்தும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வரைமுறையின்றி வெவ்வேறு அளவுகளில் விற்கப்படும் எண்ணெய் பாக்கெட்டுகளால் நுகர்வோர் அதன் விலையையும், அளவையும் ஒப்பீடு செய்வதில் சிரமம் ஏற்படுவதை கருத்தில்கொண்டு, இந்த நடைமுறையில் திருத்தம் செய்யப்பட்டு உள்ளதாகவும் நுகர்வோர் விவகாரங்கள் துறை தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடகம் அணை கட்டுவதை எந்த காலக்கட்டத்திலும் தமிழக அரசு அனுமதிக்காது என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த அணை கட்டுவதை தடுக்க தமிழக அரசு சட்ட ரீதியாக அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்று கூறினார்.

மாநிலத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட அனைவருக்கும் முழுமையான பாதுகாப்பு அளிப்பதில் மாநில அரசு உறுதியுடன் இருப்பதாகவும் திரு செங்கோட்டையன் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற மாநில அமைச்சரவைக் கூட்டத்தில் அடுத்த ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய வளர்ச்சிப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும் என்ற விழிப்புணர்வு மக்களிடையே அதிக அளவில் இருப்பதாக தெரிவித்த அவர், மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தையும் மக்கள்நன்கு உணர்ந்துள்ளதாக கூறினார்.

ஈஷா மையம் மூலம் இதுவரை 13 கோடிக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாகவும், மேலும் ஒரு கோடியே 20 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு செங்கோட்டையன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மதுரை மாநகராட்சியில் நடைபெற்றதாக கூறப்படும் முறைகேடுகள் குறித்து விரிவான விசாரணை நடத்தப்படும் என்று மாநில சட்டத்துறை அமைச்சர் திரு நிர்மல்குமார் தெரிவித்துள்ளார்.

மதுரை மாவட்ட வளர்ச்சிப் பணிகள் குறித்து இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், இந்த முறைகேடுகள் குறித்து முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

மதுரை மாநகராட்சிக்கு பல நூறு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இதுகுறித்த விரிவான மதிப்பீடுகளின் அடிப்படையில் தவறு செய்தவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறினார்.

சட்ட விரோதமாக மதுபான பார்களை நடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் எச்சரித்தார்.

இக்கூட்டத்திற்குப்பின் செய்தியாளர்களிடம் பேசிய திரு நிர்மல்குமார், திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது தொடர்பாக இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்த நிலையே தொடர வேண்டும் என்பதுதான் மாநில அரசின் நிலைப்பாடு என்று கூறினார்.

<<<<<<>>>>>>

இவ்வாண்டு மார்ச் மாதம் மேல்நிலை பொதுத்தேர்வு விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பித்த மாணவர்கள் தற்போது இணையதளம் வாயிலாக விடைத்தாள் நகலை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று அரசு தேர்வுகள் இயக்ககம் தெரிவித்துள்ளது.

**dge.tn.gov.in** என்ற இணையதளம் மூலமாக இதனை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை மறுநாள் முதல் **Computer Science, Commerce, Accountancy, Computer Applications** பாடங்களுக்கான விடைத்தாள் நகல்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

பள்ளிக்குழந்தைகளுக்கு வழங்கப்படும் மதிய உணவின் தரத்தை மாநில அரசு கண்காணிக்க வேண்டும் என்று தமிழக பிஜேபி தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாணவர்களுக்கு வழங்கப்பட்ட மதிய உணவில் புழு, பூச்சி இருப்பதாக வந்துள்ள செய்திகளும், அரியலூர் மாவட்டம் வெற்றியூரில் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் பல்லி விழுந்ததாகவும் வந்துள்ள செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக கூறியுள்ளார்.

கோடை விடுமுறைக்குப்பின் பள்ளிகள் திறந்த இரண்டு நாட்களுக்குள்ளாகவே இதுபோன்ற சம்பவங்கள் நடப்பது நிர்வாக திறமையின்மையை வெளிப்படுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மாநில அரசு விழிப்புடன் செயல்பட்டு இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தென்காசி, திருநெல்வேலி, சேலம், உள்ளிட்ட 14 மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 48 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்று வரும் மேம்பாலம் மற்றும் தடுப்பணை கட்டும் பணிகளை ஆய்வு செய்த ஆட்சியர் திருமதி. கவிதா பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

----------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் 11 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திரு. பத்மஜா ஆய்வு செய்தார்.

-----------------

திருச்சி ரயில் நிலையத்தில் இரண்டரை லட்சம் ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்களை ரயில்வே காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-----------------

சேலம் மாநகரப் பகுதியில், கடந்த ஓராண்டில் போதைப்பொருட்கள் விற்பனை செய்த 79 பேர் மீது குண்டர் சட்டத்தின் கீழ் கைது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநகர காவல் ஆணையர் திரு. அனில்குமார் Giri கூறியுள்ளார்.

--------------

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில், பொதுமக்களுக்கான தீ பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி வகுப்புகள் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 6 தீயணைப்பு நிலையங்களில் நடைபெற்றது.

--------------------

சென்னை மாநகராட்சி ஆணையர் டாக்டர் **G.S.** சமீரன், ரிப்பன் கட்டிட வளாகத்தில் கட்டப்பட்டு வரும் புதிய மாமன்றக் கூடத்தின் கட்டுமானப் பணிகளை இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய ஹாக்கி கோப்பையை இந்தியா வென்றுள்ளது.

ஜப்பானில் இன்று நடைபெற்ற இறுதியாட்டத்தில், இந்தியா **4-1** என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.

இந்த கோப்பையை வென்ற இந்திய அணியினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இப்போட்டியின் மகளிர் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற இந்திய அணிக்கும் பிரதமர் தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

---------------

ஆஃப்கானிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா முதல் இன்னிங்சின் ஆட்ட நேர இறுதியில் **3** விக்கெட் இழப்பிற்கு **368** ரன் எடுத்துள்ளது.

சண்டிகரில் இன்று தொடங்கிய இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

-------------

நார்வே செஸ் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் பிரக்ஞானந்தாவுக்கு குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, தமிழக முதலமைச்சர் திரு விஜய் உள்ளிட்டோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

**<<<<<<END>>>>>>**